# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : STC.05/2025 | Date: 10.10.2025 |
| Deposition of Witness for | : **பு.சா.1** | |
| Name | : **யோகநாதன்** | |

(எதிரி ஆஜர், எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி** :-

1) இவ்வழக்கு காசோலையை தவிர எதிரி வேறு ஏதேனும் காசோலையை என்னிடம் கொடுத்தாரா என்றால் இல்லை. எனக்கும், எதிரிக்கும் இடையே வங்கி பரிவர்த்தனைகள் நிறைய நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். எதிரியின் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, சங்ககிரி கிளையில் இருந்து 28-05-2023 ம் தேதியன்று ரூ.4,350/-ம் தொகையும், கடந்த 17-08-2023 ம் தேதியன்று ரூ.47,300/-ம், கடந்த 01-09-2023 ம் தேதியன்று ரூ.8,850/-ம், கடந்த 10-09-2023 ம் தேதியன்று ரூ.20,000/-ம், கடந்த 10-09-2023 ம் தேதியன்று ரூ.15,000/-ம், கடந்த 15-09-2023 ம் தேதியன்று ரூ.62,000/-ம், கடந்த 15-10-2023 ம் தேதியன்று, ரூ.31,200/-ம், கடந்த 17-10-2023 ம் தேதியன்று ரூ.30,000/-ம், கடந்த 29-10-2023 ம் தேதியன்று ரூ.22,200/-ம் , கடந்த 01-11-2023 ம் தேதியன்று ரூ.14,750/-ம், கடந்த 15-11-2023 ம் தேதியன்று ரூ.31,000/-ம், கடந்த 23-11-2023 ம் தேதியன்று ரூ.52,500/-ம் , கடந்த 02-12-2023 ம் தேதி, ரூ.14,750/-ம் , கடந்த 06-12-2023 ம் தேதி, ரூ.31,800/-ம், கடந்த 28-12-2023 ம் தேதியன்று ரூ.62,600/- ஆகிய பரிவர்த்தனைகளும், இன்னும் பல பரிவர்த்தனைகளும் எங்களுக்குள் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான்.

2) மேற்சொன்ன, பரிவர்த்தனைகளுக்காக எதிரியிடம் இருந்து நிறைய காசோலைகளை பிணையமாக பெற்றுள்ளேன் என்றும், அதில் ஒரு காசோலையை தான் வங்கியில் வசூலுக்காக தாக்கல் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் மாத வருமானம் என்ன என்றால் ரூ.15,000/-ம் முதல் ரூ.20,000/-ம் வரை கிடைக்கும். எதிரி எனது நண்பர் என்பதால் அவரின் பொருளாதார நிலைமை எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரியின் பெயரிலோ அல்லது அவரது குடும்பத்தினர் பெயரிலோ சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரிக்கு மாத சம்பளம் தவிர வேறு வருமானம் இல்லை என்றால் அவர் தனிப்பட்ட முறையில் எலக்டிக்கல் தொழிலும் செய்து வருவதாக சொன்னார். எதிரி பேக்ட்ரியிலேயே பெரும்பாலான நேரங்கள் வேலை செய்வதால் தனிப்பட்ட முறையில் எலக்ட்ரிக்கல் தொழில் செய்வதற்க்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, எதிரி சுழற்சி முறையில் தான் பேக்டரியில் வேலை செய்கிறார்.

3) எதிரி எலக்ட்ரிக்கல் தொழில் செய்து வருவதாக சொல்லும்போது அதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கு கடன் நிறைய உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு கடன் நிறைய உள்ளதால் பேக்டரியின் உரிமையாளரே சமாதானம் பேசியுள்ளார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு சொத்துக்களே, போதுமான வருமானமே இல்லாத நிலையில் எதிாரிக்கு நான் ரூ.9,00,000/-ம் தொகை கடனாக கொடுத்தேன் என்று சொல்வது நம்பும்படியாக இல்லை என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு கடன் கொடுத்த தேதியில் எனக்கே ரூ.9,00,000/-ம் தொகை கடனாக கொடுக்கும் அளவிற்கு வசதி இல்லை என்றால் சரியல்ல.

4) எனது எதிரியிடம் அடிக்கடி தொகை கேட்டதால் எதிரி மனஉளைச்சல் தாங்க முடியாமல் தற்கொலை முயற்சி செய்ததால் அவரது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றும், அந்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக நான் எதிரிமீது இந்த பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்து இந்த வழக்கில் முகாந்திரம் இல்லததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், எதிரிக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை என்றும், எதிரியும் சட்டப்படியான கடனுடக்காக எந்த காசோலையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,

Sd/-Yoganathan

Judicial Magistrate No.1,

Sankari.